மணவாள நாராயண சதகம் என்றும்
திருவேங்கட சதகம்.

உ

வெண்மணி நாராயண பாரதி இயற்றிய

# திருவேங்கட சதகம்

ரத்தினம் பிரஸ்

(பிராஞ்ச்),

65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.

விலை] 1952 [அணா

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

வெண்மணி-நாராயண பாரதியாரியற்றிய

**மணவாள நாராயண சதகம்**

என்னும்

# திருவேங்கட சதகம்

**ரத்தினம் பிரஸ்**

**(பிராஞ்ச்),**

**65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.**

விலை] **1952** [அணா - 6.

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
MADRAS-1

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

## மணவாள நாராயண சதகம்

என்னும்

# திருவேங்கட சதகம்

---

காப்பு

செந்திருவாழ் மார்பன் றிருவேங் கடசதகம்
பைந்தமிழா னீதிநெறிபாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

தனியன்

பன்னிருசீர் விருத்தம்

ஓங்குதண் டலைசூழு மேகமலை தேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
வுதவுமண வாளநா ராயணன் களமூரி
லுலகநீ திக்கேட்கமுன்
தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில் வாழு
செல்வன்முத் தாரையனார் [மூயர்
செழுந்தவ முதித்தநா ராயணப் பாரதித்
திருவேங்க டச்சதகமே
பாங்குபெறு முலகுளோர்க் கிருகண்மணி
பானுவிரு வழிவிழியதாம் [யகவிருட்
பவக்கடல் கடக்கவரு வங்கமாம் பொங்கு
பரவுமெய்ஞ் ஞானவழியாம் [மொளி
சங்கிக பரத்துணைய தாமிதை படிப்பவர்க
ளியல்வேங்க டேசுரன்ற
னிசையருளை யுற்றுநல மேபெருகி வாழுமவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

ஞாலமிசை திங்கண்மும் மாரியுங் கொற்றவர்
நடாத்துசெங் கோல்வளமையும்
நாடுகள் செழிப்பதுஞ் சகலதரு மமும்வேத
நாயகர் மகத்துவங்காண்
வாலகரு டன்பண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (2)

## அரசர் சிறப்பு

சீருலவு மநுநீதி மந்திரிசொ றன்புத்தி
தேசத் தியற்கைநான்குந்
தேர்ந்துசெவி விழிமனது மூன்றினும் பொறு
சேர்ந்துசெங் கோல்செலுத்தித் [மையே
தாருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடு முதலைபொரு தானபல முங்கண்டு
தரியலரை வெற்றிகொண்டு
பாருலவு கெடிசேனை தனதானி யஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன் மங்களொடு கீர்த்திப்ர தாபம்
படைத்ததிற லோனரசனும்
வாருலவு தனமங்கை மனமகிழு நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (3)

## வணிகர் சிறப்பு

திடமுடன் றம்மன தறிந்துவா ணிபமதே
செய்வரா தாயமிஞ்சிச்

செலவுசெய் யார்யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடருதந் தாலுமரி யாதையில் லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரானமனு நீதியுடை யோர்களுநரை வாய்
லளவிலாப் பொருள் கொடுப்பார் [மையா
கடுகுதனி லெட்டிலொரு கூடுவர வெனினுங்
கணக்குமுறை தன்னில்வழுவார்
காரிய விசேஷமதி லொருகோடி வுதவுவார்
கருணைவர்த் தகர்பெருமைகாண்
வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (4)

## வேளாளர் சிறப்பு

அந்தணர்கள் கருமமுஞ் சகராசர் புசபலமு
மவனிவர்த் தகலாபமு
மனைவர்க்கு மேன்மையுந் தருமமுந் தானமு
மன்புமங் கையரின்பமும்
புந்திதெளி நியமமுஞ் சாத்திரமு மாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாத வுண்மையுங் கீர்த்திப்ர தாபமும்
புகழ்கின்ற தேவர்நிலையும்
விந்தைபுரி மானமுங் குலமரபு நீதியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர் குவளைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ
மந்தர மெனும்புய சவுந்தர முகுந்தனே
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (5)

## புருஷராய்ப் பிறந்தோர் பெறும்பயன்

புருஷராய்ச் சநநம தெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியொடு மிக்கதன வானுவ தொன்றலது
பூவலஞ் செய்வதொன்று
தருமவா னென்றுமிகு கீர்த்திமா னென்றுநற்
சற்குண விவேகியொன்று
சகலரும் புகழ்கின்ற வித்துவா னென்றுரண
சங்க்ராம வீரனென்று
கருணைசே ரிந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியி லேன்படைத்தாய்
கருதுதா யுதரமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
மருவுலா வியதுளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (6)

## நகரச் சிறப்பு

பரதநீ தப்ரபல வேசியர்க ளாடலும்
பாடலும் பெறுகோயிலும்
பலவாவி மண்டபங் கோட்டையர ணங்க
பலர்மேவு கடைவீதியும் [ளொடு
இரதகச துரகம்ப தாதிசது ரங்கபல
மேய்கின்ற தளகர்த்தனு
மெண்ணமிகு மந்திரிப்ர தானிதா னுபதிய
ரியலுத்தி யோகசனமும்

விரதமறை யோராதி நாற்குலமு மொன்றென்று
மிக்கசோ டசதானமு
மேலாய்ச் சமீபித்த நதியுமாய் மநுநீதி
வேந்தனும் பெறுபட்டணம்
வரதருறை சீரங்க பட்டண மெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (7)

## அரசர்க்குரிய தொழிலாள ரியல்பு

காரியா காரியங் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றி
கருதுவோன் றளகர்த்தனும் [டக்
சீரிய தனங்களொடு ராச்சியஞ் சகலமும்
திட்டமிடு வோன்ப்ரதானி
செய்யவா சகதாட்டி யவதான வக்கணை
சிறக்குமவ னேராயசன்
சூரியன் றிசைமாறி னுந்தான் றெடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வண்மை சபைவண்மை பராசர்
சுமுகனே தானுபதி [வண்மைதெரி
மாரியது காத்தருள மணிமேக வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (8)

## இதனை லிஃதுளதாமெனல்

அதிகார மதுவந்து சேரிலெவ ருக்குமே
யதிகவல் லமைகளுண்டாம்

ஆடையா பரணங்கள் சேரிலெவ ருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவு செல்வமது சேரிலெவ ருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாம்
நெஞ்சமகிழ் விதரணஞ் சேரிலெவ ருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவு பத்தியது சேரிலெவ ருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்க பருவமது சேரிலெவ ருக்குமே
துய்யமண வாசையுண்டாம்
மதிசே ரிலங்குமுத மலரா திருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடராயனே. (9)

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்

சுற்றமொடு தானுநம் பினபேரு மின்பமாய்ச்
சுகமுறிற் புரவியமையுந்
துய்யதரு மங்களொடு கீர்த்திப்ர தாயந்
துலங்கினுற் சிவிகையமையும்
கொற்றவர்கண் மெச்சவே பரராசர் கொடிவெற்றி
கொண்டுவரி லானையமையுங்
குறையொன்றி லாமனிறை புகழ்பெற்ற வீரர்
கூறுங்கை வாளுமமையும் [முன்
உற்றவகை யிவையெலாம் வேந்தர்சன் மானமுட
னுதவாம லேபெற்றிடி
லுறைகொண்ட நாடகந் தன்னில்வரு கோல
னூர்வலஞ் செய்கோலமும் [முட
மற்றவர்கள் கோலமுஞ் சரியென்று சொல்வர்
மணவாள நாராயணன் [காண்

மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (10)

## பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்ருல் வரும் நன்மை

தந்தைதாய் வாக்கியபரி பாலனம் புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவருத விரதமும் பொய்யாத வசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ் மரபிஞேர் செய்தொழின் முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்தபேர் பரசுராமன் கவச குண்டலன்
செயராம ஞெடுவீடுமன்
அந்தமிகு சொல்லரிச் சந்திரன் மாபலி
யடறரும ஞெடுபகிரத
னருள்பிரக லாதனிவர் போற்பெருங் கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரார் போற்றவளர் சேஷகிரி வாசனே
மணவாள நாராயணன்
மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (11)

## சூது முதலியவற்ருல் வருந்தீமை

சூதுபெறு வித்தையும் பரதார மோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காத புத்தியு மடங்காத வார்த்தையுஞ்
சொல்லிச்செ யாததிறமும்
தீதுபெறு வஞ்சமு மதங்களும் பிறருடைய
திரவியந் தனிலாசையுஞ்
சிந்தையக மெனுமகங் காரமும் பெற்றபேர்
சீர்நளன் கீசகன்ருன்

மீதுபொரு வாலிசக ரன்குமரன் சிசுபாலன்
வென்றியுத் தரன்வில்வலன்
விந்தைபெறு துரியோத னன்சனகன் முன்
விதமுற் றிருப்பர்கண்டாய் [பெற்ற
வாதுபெறு தானவரை மோதுமொரு திகிரியாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (12)

சாதி முதலானவைகளின் குணமே
சிறந்ததெனல்

தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்தகமு வாடா திருந்தாலு மெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ
கடலெலா நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியி னூற்றுகுமோ
காகங்கள் கோடிதொனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும்
பலகூட்ட முந்தேகமார்
வடிவதிக மன்றுகுண மேயதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (13)

செல்வத்தால் வரு முயர்வு

செல்வமது சேரிலோ வேங்குபேர் வேங்கனுந்
திரளாகில் வேங்கடனுமாஞ்

செயல்கொண்ட வேங்கடா சலனுமா மைய
    திரளைய ரவர்களாகும் [ராந்
நல்வரிசை கொடுதான நடத்திடுங் காரிய
    நயந்தது தாகுமப்பா
னல்லோலை கிள்ளாக்கொ டொப்பமே லொரு
    நவிலுமுன் கப்பமிடுவார் [வசன
சொல்வண்மை வாவென்ற பேர்வாரு மென்பார்
    சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்ற தேவரீ ரவர்களாங் காணுமுன்
    றொழுதெழுந் தருளுமென்பார்
வல்விதம் பெறுபரம லோபியர்கண் மிண்டனே
    மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
    வரதவேங் கடராயனே. (14)

## வறுமையால் வரு மிழிவு

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல் வடந்தை
    சோகமுற வசைகூறுவார் [தாய்
துன்பமொடு மனமெலியு மேனிவேற் றுருவ
    தொலையாத கவலைவளரும் [மாந்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்விபோலார்
    மூதாத்தி லதிகபசியா [சொன்ன
முறவின் முறை யாருமொரு வார்த்தை சொல்
    வுத்தரமு மொருவர்கேளார்
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
    மிடிவந்து சேர்ந்ததென்றுன்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
    வித்தையே தெவரறிவர்காண்
மதிக்கின்ற வுன்பதம் போற்றிலவை சேருமோ
    மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (15)

## உடனே கண்டிக்கப் படுபவர்கள்

முடிகொண்ட கொலையாளர் களவினோர் சாதி
முறைமைவழு கின்றதீயோர் [நெறி
மூர்க்கமுறு பகையாளர் வெகுசன விரோதியர்
மொழிமாறு கோளுரைப்போர் [கண்
மிடிகொண்ட பேரைக் கெடுத்துளோர் கற்புடை
மெல்லியரை மேவுமயலோர் [யண்
விசுவாச காதமிகு செய்குவோர் துஷ்டமா
மிருகங்கண் மிக்கபிணிகள்
கடிகொண்ட விஷமுடன் செய்கன லென்னவே
கருதுபதின் மூன்றுவகையுங்
கண்டவுட னேபின்னை யெண்ணாது கண்டித்
கருணைமநு நீதிகண்டாய் [தல்
வடிகொண்ட தெள்ளமுத மனையகுண சீலனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (16)

## பொறுத்துக் கண்டிக்கப் படுபவர்கள்

கண்டுநிரு பந்தனைத் தள்ளுவோர் குருசுவாமி
காரியக் குறைசெய்குவோர்
காணு விடத்திற் பழித்துளோர் வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுட னனுதினந்
தவிராத கலகமிடுவோர்
தம்முடைய வலிமையா லெளியோர் வழக்
தள்ளிய மதங்களுடையோர் [கினைத்

அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோ
ராகுமிவ ரெண்மர் தமையு
மாறுபோன் மூன்றுபிழை கண்டபின் கண்டிப்ப
தரசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவு கின்றமலர் தண்டுளப மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (17)

## என்றுங் கண்டிக்கப் படாதவர்கள்

தூதாகி வந்தபேர் மிக்கதா னுபதியர்
துதிபெற்ற தந்தைதாயார்
சொல்லுமா சாரியர் புரோகிதர் புராணிகர்
சுகந்தந்த போகமடவார்
வேதாக மங்கற்ற வைதிகர் தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையா லுயர்கின்ற கவிராஜர் சுத்தரண
வீரர்மர பினிலுயர்ந்தோர்
தீதான வெம்பிணி யடைந்துளோர் வறுமையோர்
சிறுவரொடு தனநம்பினோர்
செய்யுமிவர் பதினெண்மர் மதியாத குற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால்
வாதாடி யெதிர்செய்கை மன்னர்நெறி யன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (18)

## இவர் இதனல் வெல்வரெனல்

வேந்தருட னேவேந்தர் வாதுவரி லோசெடி
வெற்றிகொண் டேசெயிப்பார் [கொள்

வீரருடனே வீரர் வாதுவரி லாயுத
விதத்திறு லேசெயிப்பார்
போந்திடு நியோகியர்கள் வார்த்தையுசி தத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புல்லர்க்கு வாதுவரில் மரலொம் வசை
பொதுவிலக் காற்செயிப்பார் [சொலிப்
சாந்தமணி வேசியர்கள் வாதுவந் தாற்பரத
சங்கீத மொடுசெயிப்பார்
சரசகவி ராசர்பிர சங்கத்தி ஞல்வாது
தன்னைச் செயிப்பர்கண்டாய்
மாந்தளிரை நிகர்மேனி ராதையதி மோகனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (19)

இக்கூற்றந்தா லிது பயன் படாதெனல்
செயல்கொண்ட மாமனது பங்கமா ஞற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுண வின்பரச மில்லாத மங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன
இயல்கொண்ட கீர்த்திமரி யாதையில் லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்ற போதுதவி செய்யாத பேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்ட விழியிஞள் பேரிளம் பெண்
காட்டிலென் மூடிலென்ன [கொங்கை
கருணைகொண் டொருவருக் குரையாத பேர்
கற்றென்ன மறக்கிலென்ன [வித்தை
வயல்கொண்ட பயிர்பேணி புயல்கொண்ட களா
மணவாள நாராயணன் [மூரில்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (20)

## இவையெல்லா மளவுபடினு மாசை யளவுபடாதெனல்

பொங்குநதி மணலுமா காயத்தி னெல்லையும்
பொழியுமழை யின்றிவலையும்
புடவிமிசை வருசனமு மடவிமிசை வளர்
பொருப்பின்மிசை யுற்றசிலையும் [மாமும்
திங்களுட னுற்றதா ரகைகணமு முன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண் மனமுமுனை நினையாத பல
சென்மமுங் கடலாழமும் [மூடர்
அங்கசன் கணைபுரியு மோகமுங் கவிராச
ரருள்பெற்ற புத்திநலமு
மளவுகண் டாலுமோ மனிதருறு மாசைதனை
யளவிடக் கூடாதுகாண்
மங்கைமிதி லாபுரி மடந்தைமகிழ் நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (21)

## இன்னார்க்கு இது இல்லையெனல்

காதல்மிகு காமுகர் தமக்குமுறை யில்லைவஞ்
சகர்க்குமரி யாதையில்லை
கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறி பூசுரர் தமக்கருள்செ யாரிலை
விரோதிக்கு நேயரில்லை
மெஞ்ஞானி யர்க்குவரு சாதிகுல மொன்றில்லை
வீரர்க்கு மனபயமிலை

போதமிகு யோகிக்கு வினைசெய்கு வாரில்லை
பொய்யர்முன் சாக்ஷியில்லை
புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வரைப்
போற்றிலா ரொருவரில்லை
மாதரெழில் கண்டுமன மகிழாத பேரில்லை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (22)

## இது இவ்வாறாயின் இதுவாமெனல்

எழுதினது சொல்வதே ராயரோப் பந்தனக்
கிசையுமவ ளேரம்பையா
மிடர்வேளை யுதவுமவ னேகன்னன் வழி
கேற்றதே யுற்றவசுவம் [நடைக்
பழகிமன மறியுமவ னேயூகி மந்த்ரிநற்
பயநீக்கி ஞேன்தந்தையாம்
பசியிற் கிடைத்ததே யமுதமாந் துயிலினேர்ப்
பட்டதே புஷ்பசயனம்
நிழல்தந்து காத்ததே கற்பகம் தாகத்தி
னீர்தந்த தேகங்கையாம்
நிறைபிணி தவிர்த்ததே சஞ்சீவி தன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்
மழைமுகி லெழுந்தனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (23)

## இவர்க்கு இது தெய்வமெனல்

தீதுபுரி லோபியர் தமக்குப் பணங்களே
தெய்வமாம் காமுகர்க்குத்

தெரிவையர்க டெய்வமாந் துஷ்டருக் கென்
    தீமையே தெய்வமாகும் [னிலோ
நீதியடை யோர்க்குப் பயந்தீர்த் திரக்ஷித்த
    நேயரே தெய்வமாகும்
  நீங்காத் தரித்திரர் தமக்குக் கொடுத்தபேர்
    நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனை வர்க்குமறை யோர்தெய்வ மம்புவி
    தனக்கரச னேதெய்வமாம்
  சகலர்க்கு மாசாரி யன்தெய்வ நாரியர்
    தமக்குநா தன்றெய்வமாம்
மாதவம் புரிஞானி யர்க்குநீ தெய்வமா
    மணவாள நாராயணன்
  மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
    வரதவேங் கடராயனே. (24)

இது உண்டாயினும் இது இல்லாவிடிற் பயனில்லை யெனல்

எத்தனை பொருட்சுவை யிருக்கினும் பக்திரச
    மில்லாத கவிகளென்ன
  எண்கோடி சம்பளந் தருகினுஞ் சன்மான
    மில்லாத சேவகமென்ன
சித்ராதி லீலைபல செய்யினு மிதமூண்டு
    சேராத சுகமதென்ன
  செம்பொன்மிகு செல்வமுண் டாயினும் பயிர்
    செயலிலா வளமையென்ன [கொண்ட
வித்தையுள வெல்லாம் படிக்கினுங் குணவினய
    மேவாத பெருமையென்ன
  மெய்த்துளசி யில்லாத நந்தவன மெனவே
    விளங்குமென் பார்கள்கண்டாய்
மத்தகச ராசன்மகிழ் விசயநர சிங்கமே
    மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (25)

## இது இச்சிறப்படையினும் பயனில்லையெனல்

காட்டிலின் டஞ்செடி தழைத்தென்ன காஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைநாண லெல்லா மலர்ந்தென்ன காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின் கழுத்திலதர் நீண்டென்ன நீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
அற்பருக் கதிகாரம் வந்தென்ன பேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன
நீதியறி யாதமூடர்
நிறைசெல்வ ராயென்ன ஞானமில் லாக்கல்வி
நெறிபோ லிருக்குமென்பார்
வாட்டடங் கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்
மணவாள நாராயணன் [ணனே
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (26)

## கலியுக தோஷம்

அம்புவியில் மிக்கமெய்ஞ் ஞானியைக் கண்டா
அதுவுமொரு வேஷமென்பா [லும்
ராகம புராணமது நூல்விரும் பார்கள்பரி
யாசகதை யேமெச்சுவார்
கம்பமிசை யொருகோடி கரணமிட் டாலுமது
கண்கட்டு வித்தையென்பார்
கற்பனை யலங்கார மாக்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்

நம்பிவிசு வாசமொடு துதிசெய்யி னுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னைந்தகலி யுகமகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்றுகுறை சொல்வர்கண்டாய்
வம்பவிழ் மலர்ச்சோலை மலையலங் காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (27)

## அரசரது நன்றி அறியாமை

அரசரைக் கண்டுபின் காரியக் காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகார மொன்றினைப் பார்ப்பவ ரிடத்தினு
மதுக்கொற்றி ரட்டியீந்தும்
கருதுநிலு வைப்பணந் தவணைப் பணங்கண்
கடன்வாங்கி யேகொடுத்தும் [முன்
கணக்கர்செல வெழுதார்க ளொட்டார்கடுறுவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட் டுக்காரர் வைவார்கள் கொல்லரோ
வெயிலிடை நிறுத்திவைப்பார்
விதமாகு மவரவர்க ளெல்லாஞ் சபாசென்ன
மெய்ப்பாய் நடந்துகொளினும்
வரிசைபெறு துரைகளவ ருமைசற் றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (28)

## கவிவாணரருமை யறிவாரில்லாமை

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினுங்
கனவரிசை யொருபச்சடங்

கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பிள்ளைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொரு ளுலாவென்னி லுறுமாலை மடலுக்கு
நாணயம தாயொருபணம்
நல்வண்ண மென்னிலொரு சாப்பாடு மாலை
யெனினன்மைதரு தாம்பூலமாம்
அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளாபளா
அதிகவெகு மானமாகு
மப்படியு மாயிரத் தொருவரென் றுலெங்
ளருமையெவ யறிவர் கண்டாய்
மற்பொருத மல்லரொடு முற்பொருத வீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (29)

இதனையிவரன்றி யிவரறியாரெனல்

கீர்த்தனைக ளின்மகிமை பாகவத ரல்லாற்
கிரிக்குறவர் தாமறிவரே
கீர்த்திப்ர தாபமது விதரணிக ரல்லாது
கெட்டலோ பியரறிவரோ
சேர்த்தமது விக்யான நீதிமன் னவாலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்யபக வற்கீதை மெய்ஞ்ஞானி யல்லாது
சென்மநீ சர்களறிவரோ
கோத்தமணி மாலையை மங்கையர்க ளல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோக மகிமைதனை நாகரிக ரல்லாது
கூறுபேடிக ளறிவரோ
வார்த்தையுசி தத்தைமந் த்ரிகளன்றி யறிவரோ
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (30)

## பயனில் சொல்லி னிழிவு

அகமென்று தன்னைப் புகழ்ந்தபே யுந்தந்தை
யன்னையர் வருத்தமுறவே
யயலார் தமக்குதவு பேயுமட வார்புத்தி
யனுதினங் கேட்டபேயும்
சுகமென்று பொதுமாத ரைக்கூடி மனைவியைத்
துயரமே செய்தபேயும்
துணிந்துரண களமுற்று முறிகின்ற பேயு
சொன்னதிலை யென்றபேயும் [முன்
செகமென்ன ராமென்ற தலைவென்ற பேயுமியல்
செய்ந்நன்றி கொன்றபேயும்
திரளான சபையினிற் பயனிலா வார்த்தை
செய்கின்ற பேய்க்குநிகரோ [யுரை
மகமென்று கோசிக னழைக்கமகிழ் தூயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (31)

## எல்லை கடத்தலின் வருமிழிவு

அரசர்மே லாணைதனை யெண்ணுத குடிகளு
மாதாய மிஞ்சுசெலவு
மன்புடைய பேர்புத்தி கேளாத கோபமு
மவைக்கடங் காதநாவும்
சரசவகை மிஞ்சவே வந்தபரி காசமுந்
தனைமிஞ்சு தொழிலாளரும்
தயிரியந் தனைமிஞ்சு கவலையும் சாக்ஷியோர்
தமைமிஞ்சு முறைவழக்கும்

கரசரண வவயவந் தனைமிஞ்சு தேகமும்
கவியின்மிஞ் சியவெழுத்துங்
கருதுமுறை கேளாத மனையாட்டி புணர்நாய
கன்புகழை யொக்குமென்பார்
வரசரச கவிராஜர் புகழ்வேத குலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (32)

## இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்

அண்டருக் கமுதமது சொர்க்கத்தில் வேதியர்க்
கமுதமது சொல்லுரையிலே
ஆனகவி ராஜருக் கமுதமணி நாவிலே
யாவினுக் கமுதமுலையில்
பண்டிதர்க் கமுதமது கையிலே விதரணிகர்
பங்கிலமு தங்கண்ணிலே
பாகவத ருக்கமுது காதிலே பரிவுடைய
பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடிய ருக்கமுத மாமதிய மெனவே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரி யோர்தமக் கமுதங் குணத்திலே
யுணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டல மளந்தவுன் பாதத்தி லென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (33)

## இவர்க்கு விஷம் இவ்விடத்தெனல்

திருடருக்கு விடமெலாங் கையிலே காமமிகு
தெரிவைக்கு விடமுலையிலே

தீயபொய் யர்க்குவிட நாவிலே மதமுடன்
றரிவோர்க்கு விடம்நிதியிலே
கருதரிய கோளர்க்கு விடமுதடு தன்னிலே
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவி விடங்கள்பல் லடியிலே தேட்
கனவிடங் கடைவாலிலே [கெனிற்
அரியதுஷ்டர்க்கென்னி லெட்டிமர மென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக் கெடுத்திடும் பகைவர்விட மனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிட மல்குலிற் றெரியவச மன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (34)

இவர்க்குப் புண்ணிய மிதுவெனல்
உன்னுடைய பதசேவை கண்டுபணி கின்றதே
யுடல்செய்த புண்ணியமதாம்
உரைகொண்ட கீதையின் சாரங்கள் கேட்பதே
யுற்றசெவி யின்புண்ணியம்
தன்னுடைய புத்திர ரனந்தசோ றுண்பதே
சாற்றுநா வின்புண்ணியந்
தத்துவ முணர்ந்தபெரி யோர்தமைக் காண்
சார்ந்தவிழி யின்புண்ணியம் [பதே
பன்னுமிர வலர்கேட்கு முன்னங் கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரத மங்கைகுண மிக்கபுரு டற்குப்
பலிப்பதே வெகுபுண்ணியம்
மன்னுமிவை முன்செய்த புண்ணியம் தென்பர்
மணவாள நாராயணன் [காண்

மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (35)

## இவர்க்குப் பாவ மிதுவெனல்

திருந்துகற் பனையிலாப் புன்கவிகள் கேட்பதே
செவிசெய்த பாவமாகும்
செயலருமை யறியாத பேர்கள்முன் சேவகந்
திரிதல்கால் செய்தபாவம்
பரிந்தவுப சாரமா தரவிலார் மனையுணவு
பருகலுறு வின்பாவமூரம்
பாவனை லயஞ்சுருதி நயமிலாப் பரதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருந்தமிழை யறியாத பேர்களிட மேற்கின்ற
தகைமைகை செய்தபாவம்
தன்பெயர் விளக்காத பிள்ளையைப் பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருந்துயர முன்செய்த பாவவினை யென்பர்காண்
மணவாள நாராயணன்
மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (36)

## இவர்க்கிலைவ யுளவேனு மிலைவ வேண்டு மெனல்

அதிவீர னென்னிலுந் தந்திரவு பாயமுட
னடையலரை வெல்லல்வேண்டும்
ஆயிரம் வித்தைகற் றாலுமுல கந்தனி
லடக்கமதிருத்தல்வேண்டும்
நதிகோடி நீந்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும்
ஞானதத் துவமுணர்ந் தாலுமுல கத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்

துதிசேர் குபேரனென் ருலுமொரு லாபமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டும்
துய்யவல் லமையுடைய னெனினுமொரு சார்
றுரைகளைக் காணல்வேண்டும் [பிறைற்
மதியூசி யென்னினும் பெரியர்சொற் கொளல்
மணவாள நாராயணன் [வேண்டும்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (37)

## இவர்க்கிவை வேண்டாமெனல்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டும்
பின்னென்று முன்னென்று பேசியே யவ
பேர்கொண்டு திரிதல்வேண்டாம் [மான
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பல்வேண்டா
மொருவருக்கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்
லூமைபோ னிற்றல்வேண்டாம் [சபையி
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டை
ருன்போய் விலக்கல்வேண்டாம் [யிற்
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னினுந்
தன்னையே புகழல்வேண்டாம்
மற்ருென்று மெண்ணுது செய்யல்வேண்
மணவாள நாராயணன் [டாமென்பர்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (38)

## இவர்க்கிவை பாவமெனல்

அரசர்வெகுமானஞ் செய்போ துதடை வரு
வன்றுவிதி பாவமாகு [கிலோ

மானபெரி யோர்பழமை யால்வந்த நேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்ற காரியங் கைகூடி யேபின்பு
தவறில்லை திருதியாகுஞ்
சற்குண மடைந்துளோ ருத்தமரை முனிவதே
சந்திராஷ் டடமாகுமாம்
கருதிய விருந்தினுட னுண்ணாத தனியுணவு
காணுமது வேதுர்த்தினம்
கலகமே செய்கின்ற வீணரைக் காண்பதே
கனவர்ஜ வேளைகண்டாய்
மரிசிசுத னெனவந்த காசிபகு லோத்துங்க
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (39)

இவர் இத்தீக்கோ ளாவரெனல்

துரைமக்க ளைக்கண்டு தங்கள்கா ரியமெலாஞ்
சொல்லிச்செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சி
தோன்றுவோ னவலமாகும் [மெய்யெனவுந்
திறமுற்ற கல்வியொடு குணமிக்க கவிராஜர்
திரளான ராஜசபையில்
செய்யுட்ப்ர சங்கத்தி லொருபழுது சொல்லு
சென்மத்தி லங்காரகன் [வோன்
அருள்பெற்ற விதரணிக ரைக்காத் தனேகரு
ளனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக் கும்போதி லிடர்சொல்லி விலக்
னஷ்டமச் சனியதாகும் [குவோ
மருவுற் றலர்ந்தவம் புயமணியு மார்பனே
மணவாள நாராயணன்

மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (40)

## இது இவ்வாருயின் இச்சிறப்பிற்ருமெனல்

தரணி மன்னவர் சபையில் மெய்க்கின்ற வரி
தனதுபட் டாபிஷேகம் [சையே
சபாசென்று மெச்சிக் கொடுக்குமதி காரமே
சாம்பிராச்ய போகமாகும்
பரிவுட னினைத்தபடி காரியங் கூடிலது
பதினென்றி னிற்குருவதாம்
பந்துஜன வர்க்கங்க ளுடனுணவு செய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவைகுண ரஞ்சிதம தாய்வந்து சேருநா
ளன்றமிர்த சித்தயோகம்
அன்பான பெரியோர்க டரிசனஞ் செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம் பூவைமுகி னீலமணி வண்ணனே
மணவாள நாராயணன்
மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (41)

## மனிதர்களிலே துஷ்டரும் ராக்ஷசரும் பூதரும் இவரெனல்

புண்ணியம் பாவமறி யார்மாத வஞ்செயார்
யுகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப் போற்ருர்கள் பரதிரவியங் கொள்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொரு காரியஞ் செய்பவர்கள் வலுமை
எவருக்கு மிடர்புரிகுவார் [யால்
இரக்கமில் லார்பொய் யுரைப்பர்வஞ் சிப்பவர்க
ளிவர்கள்ராட் சசர்களாவார்

நண்ணியெளி யோர்தமை வெருட்டுவார் வலிய
நாடிவஞ் சனையில்வெல்வார் [வரை
நாரியர்க ளெவரையுங் கூடுவார் மிகவுண்பர்
நாணமறி யார்சூதர்காண்
மண்ணிலொரு மூவடி யிரந்தநெடு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (42)

## மூர்க்கர் முதலியோ ரியல்பு

மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி
மேலாகி னேன்மூர்க்கனும்
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யுமவ னேதுஷ்டனும்
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடர்கள்
செய்பவன் மகாபாதகன்
ஐயா வெனப்பணிந் தாலுமே கோபம
தடங்காத வன்குரூரன்
அனுதினந் தீமைபுரி வோனெந்த நாளினு
மடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரில்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (43)

## இப்படிப்பட்டவன் இவ் வங்கவீன
## னுவனெனல்

காதவழி யானநதி மாதலந் துதியாத
கயவனே யீனமுடவன்

கைதந்த வோலைவா சிக்கமாட் டாதவொரு
கசடனே மிக்ககுருடன்
நீதுபெறு தன்களவு கண்டவர்க் குத்தரஞ்
செப்பிலா தவனூமையாம்
செயலான தன்மகதை யொன்றெனினு மறி
செய்கையுடை யோன்செவிடனும் [யாத
ஏதெனினு மொருபேர் விளங்காத தேகம
தெடுக்குமவ னேகுருபி
யென்றெனினு முன்பாத தரிசனஞ் செய்யாத
வீணனே நீசனென்பார்
மாதுசத் தியபாமை தழுவுமணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (44)

## உலோபியர் வகை

நசைபெற்ற வேதவே தியர்தமக் குதவா
நவின்றலோ பர்க்குநேயன்
நாற்கவி மொழிந்தகவி ராசர்க்கு மொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்ற கீதமுறை செய்பாட கர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலான பட்டுரா சர்க்குமொன் றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்ற விகடகவி ராசர்க்கு முதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாத ரபினயங் கண்டுமொன் றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்ற லோபமா தங்கள்கண் டீரவன்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (45)

## உலோபியர் வஞ்சப் புகழ்ச்சி

கண்டபகை யாளிமுன் னின்றுபொரு தாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடு கள்ளருக் காடையும் பணிகளுங்
காணமே லேகொடுப்பார்
சண்டமா ருதமென்ன வருகின்ற பகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
தனங்களெல் லாங்கொடுப்பார்
அண்டிவரு மெமதூதர் வந்துதான் கேட்குமுன்
அங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிமிசை யிப்படி கொடுக்கின்ற பேர்கடமை
யதிலோப ரென்பதென்னே
மண்டலமும் விண்டலமு முண்டகனி வாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (46)

## உலோபியர் குணமாருமை

தேன்கொண்ட துளியொன்றி னாலேழுகடலெ
தித்திக்க வேசெய்யினும் [லாந்
செய்யபூ மலரினால் வச்சிரந் தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்ட மலையெலாங் கைக்கொண்ட வெ
ணெயாற் கவினுற்ற மெருகுசெயினுங் [ண்
கயவர்க்கு நீதியும் பேடிக்கு வீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்

ஊன்கொண்ட மூடர்க் கிரக்கமுந் தெளிவுற
வுரைத்துநல மேசெய்யினும்
ஊமைசெவி டன்குருடன் முத்தமிழ் படிக்
மூலோபருக் கீவுவருமோ [கினு
வான்கொண்ட தேவர்மொழி மலர்கொண்ட
மணவாள நாராயணன் [பாதனே
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (47)

மக்களிற் பதராவா ரிவரெனல்

கொண்டகடன் வட்டியுட னன்றுபோற் குண
கொடுத்துமகி ழாதபதரும் [மாய்க்
கூறுபிணை சாட்சிமுறி யுடன்மறித் தாலுங்
கொடாதொளிக் கின்றபதரும்
கண்டவுட னொருகோடி சொல்லிப்பி னென்
கருதிச்செ யாதபதருங் [றெனுங்
காணு விடத்தினிற் பழிகூறி யவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்
பண்டொருவர் செய்ந்நன்றி தனையே மறந்துபின்
பழிசொல்லு கின்றபதரும்
பரமாத ராசையால் வசைகொண்ட பதரும்
பறந்துமிக வுஞ்சிதறவே
மண்டிவரு சண்டப்ர சண்டமாரு தமான
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (48)

இக்குற்ற முடையோர்க்கும் இதுசெயல் வேண்டுமெனல்

கதித்திடும் பகைவரென் றாலுமா பத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்

கல்வியறி யாதசபை யெனினும்ப்ர சங்கங்கள்
கவிராஜர் செய்யல்வேண்டும்
விதித்தமுழு மூடரென் றுலுந்த மைந்தர்க்கு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யசின மூர்க்கரென் றுலும்நல் லோர்
மேற்புத்தி சொல்லல்வேண்டும் [கண்டு
அதிர்ஷ்டமிலை யென்னினுஞ் சலியாமல் மிக்க
லதிலே முயற்சிவேண்டும் [தொழி
அசாத்தியம தானகன ரோகமென் றுலு
மோர்அவுஷதம தீவர்கண்டாய்
வதிஷ்டரொடு வான்மீக முனிதுதி சரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (49)

இதினும் இது மிக்கதெனல்

தினமுந் திரிந்துதனி யாகியே மிக்கபொரு
டேடியே வாழுமதிலுஞ்
செல்வரொடு தந்தைதாய் சுற்றமுங் கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுமரி யாதையொடு பெருமையறி யாதபேர்
தனமாரி பொழியுமதிலுஞ்
சமமான மேன்மைதெரி கின்றபெரி யோர்
தாம்பூல மேயதிகமாம் [தந்த
கனமருவு பலபல மகாவித்தை சிலசில
கருத்தோடு படிக்குமதிலுங்
கருணைபெற வொருவித்தை யாயினுங் குறை
வறக்கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சில ரிவையன்றி யவையதிக மென்பர்
மணவாள நாராயணன் [காண்

மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (50)

## இதினு மிது வென்றியெனல்

மிக்கதுடி கண்டுளம் வெருண்டுகலை மானையே
வென்றுசய மாகுமதிலும்
வெஞ்சின மிகுந்துகவ ரும்புலி யுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமு திர்ந்தபே ரிளமாது கொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்மணி மாலைபுனை வாலரதி யூடலிற்
பாததா டனமேசெயம்
தக்கதொரு கல்விநெறி யறியாத முழுமூடர்
சந்தோஷ மாகுமதிலுந்
தமிழருமை யறிகின்ற பெரியோர் பழித்தநிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளை செங்குவளை வாசமலர் களமூரில்
மணவாள நாராயணன்
மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (51)

## இதுவிதனை வசப்படுத்து மெனல்

சிந்தைதெளி கல்வியே லோகவசி யம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரி யாதையே வித்வசன வசியமாம்
சொல்வமுற வோர்க்குவசியம்
எந்தவித முந்திரள நல்கும்ப ணங்களே
யின்பவிளை மாதர்வசிய
மெப்பொழுது மவர்மன தறிந்துகட் டிக்காத்
திருப்பதே ராஜவசியம்

தந்ததண் டனைகளே துஷ்டசன வசியமாம்
தானமே கீர்த்திவசியம்
சாந்தகுண நயமாய் நடந்திடு மொழுக்கமே
சகலசன வசியமாகும்
மந்திரமெ ழுத்தெட்டு மேயுன்து வசியமா
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (52)

## இச்செய்கையோர் இச்சிறப்புப் பெயர் கொள்வரெனல்

சரணென் றடைந்தவர் தமக்குவரு வினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடைய செய்கைபோ லெவரையும் பார்க்
தகைமையோன் றெய்வபுருஷன் [கின்ற
திரணமெனி னும்பிறர் பொருட்காசை யில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
றீராத வினைவரினு மற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருவிலாத் தந்தைதா யென்னினுங் கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர் மனதிற் குறிப்பறிந் துதவு
புருஷநா யகமென்பர்காண் [வோன்
மரபெலாமிப்படிப் புகழ்ந்தகுண சேகரன்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (53)

இச்செய்கையோர் இவ்வழி பெயர் பெறுவரெனல்

சற்றெனினு மொருகல்வி யறியாத கயவனே
தாங்குமுயிர் கொண்டமரமாந்

தன்புத்தி யன்றிப்பிறர் புத்தியால் வினைசெயுந்
தகைமையோ னேபதுமையாம்
கோற்றவர்கள் பகையாற் றூரத்துண்டு திரிகு
கூகையுற வானபக்ஷி [வோன்
கோபமது தந்தையே யன்றிமற் றோரையுங்
கோபிக்கு மவன்மிருகமாம்
கற்றபெரி யோரையெதிர் பணியாத மூடனே
கைகால் முளைத்தசிலையாம்
கண்டவர்க ளெல்லாம் பழிக்கின்ற கோளனே
கனதுஷ்ட ஜெந்துவென்பார்
மற்றிவர்க ணேயமது கனவிலுங் காணாத
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (54)

## கல்விப் பொருட் சிறப்பு

தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்
தேசமெல் லாந்துதிக்குந் [திடிற்
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெ
செம்பொன்மிகு செல்வமதுபோல் [லாஞ்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலி
வெம்பவரு சலனமில்லை [னல்
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்ளராற் றிருடவும் முடியாது வரவரக்
கன்மலாற் குறைவுறாது
கருணைஞா னந்தழையு மாகையா லுனையிதய
கமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலென வருகின்ற மாடபூ சியரதிபன்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (55)

## கவிதைச் சிறப்பு

உரைகொண்டு சொல்வரிசை சேர்ந்துபொரு
யோசைபெற் றேமதுரமா [ளின்பவகை
யுற்றநவ ரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகி யேகவுடமாய்
நிரைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின்ற சபைதனி லுதாரணம தாகிநிலை
நின்றுபழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில் வருமமுத பாக
தேசப்ர சித்தியாகச் [மாய்த்
செப்புமொரு கவிகொண்டு குலமெலாம் வந்
செயினுமது நிகராதுகாண் [தடிமை
வரைகொண்டு பொழியுமழை காத்தருளு
மணவாள நாராயணன் [மையனே
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (56)

## தந் தீவினைப் பயன்

திங்களுத யங்கண்டு மலரா திருப்பது
செழுங்கமல முற்றவினையே
தினகரனை யெதிர்கண்டு முகைகொண்டு வாடு
சேதாம்பல் செய்தவினையே [வது
கொங்குலவு சண்பக சுகந்தமலர் கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழை கண்டுள மெலிந்திட வருந்
கோகிலஞ் செய்தவினையே [துவது

அங்கணுல கெங்கணு மகிழ்ந்தபெரி யோர்களுக்
கருளா திருந்துவிடினும்
அவர்மீது குற்றமது சொல்வரோ சேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்
வங்கியந் தருமிசை கனிந்தகனி வாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. (57)

## அரசர் கவிவாணர்க்குச்செய்யு முபசாரம்

போசனஞ் சந்தமலர் மாலைதாம் பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடு கவிகையுஞ் சிவிகைகரி வாத்தியம்
பூமிமனை தனதானியம்
தாசுலவு துவசமெனும் வெகுமான சோடசந்
தூதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கெனத்
றுதித்திட லிருக்கையுதவல் [தழுவுத
நேசவெகு மானங்கள் செய்தெழுதல் வழிவிடுத
னிறையங்கி காரமேழாம்
நெறிகொண்ட புவிராசர் கவிராசர் பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண்டாய்
வாசவன் பெறுவிசய சூதனெனு நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. (58)

## புல்லோர் நல்லோர் குணமறியாரெனல்

சந்தன வனந்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்

தாளங் குளிக்குமவ ரதன்மாலை யணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலி தாமரை யடுத்து மண்டூகங்
கருஞ்சேறு தனையருந்தும்
காமருவு தேமாவின் மிசையிருந் தாலுமோ
காகமது வேம்புநுகரும்
அந்தவகை போலநல் லோர்தமை யடுத்தே
யனேகநாட் பழகிவிடினு
மற்பர்தா மறிகின்ற தறிவதல் லாமன்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடு கணந்தன்னி லவர்பெருமை யறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (59)

**புல்லரைப் பாடும் புலவர் பயன் பெறுமை**

நாவினிற் சொல்லுநய முங்கண்டு வஞ்சகரை
நட்பென்று வருநேயரும்
நவமதன னென்னவெழில் கண்டுபே டன்
நாடிவரு மடமாதரும் [தன்னை
காவினி லுயர்ச்சியும் பசுமையுங் கண்டிலவு
காத்திருக் கின்றகிளியும்
கானலைக் கண்டுபுன லென்னவே யாசையொடு
கருதியே யேகுமானும்
பூவினிற் பொலிவுமண முங்கண்டு கேதகை
பொருந்துதே னுடுமளியும்
புல்லர்தஞ் செல்வங்கள் கண்டுதுதி செய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற் குயில்வேளை வாவெனுங் களமூரில்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (60)

**மேலோர் செயல் கீழோர்க் காகாமை**

எந்தவினை செய்தாலு முனிவோர்கண் மாதவ
மிசைந்ததாற் பெருமைபெறுவா
ரிகழ்ந்துவசை சொல்லினுங் கவிராசர் வித்
லென்றுமிகு மேன்மைபெறுவார் [தையா
சிந்தைமத மாயொன்று வழுவினுந் துரைகள்
திருவினாற் புகழ்சிறப்பார் [செந்
சீரியர்க ளெப்படிப் புரிந்தாலு மேற்குமது
சிறுமையோர் செய்யவசமோ
தந்தியது நெறிதப்பி யேநடந் தாலுமது
தன்னைமத யானையென்பார்
தானுமப் படிதவறு செய்யிலோ பேயென்று
தள்ளிமுனி வார்கள்கண்டாய்
மந்திசெறி யிடபகிரி தன்னிலுறை வாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (61)

**இது இல்லையாயின் இது விளங்காதெனல்**

சந்திர னிலாவிரவு மதுரமில் லாதகவி
தனையரில் லாதசெல்வஞ்
சற்சன ரில்லாதவூர் புரவியில் லாதபடை
தளபதி யிலாதசேனை
பைந்தொடி யிலாதமனை பாடலில் லாவோசை
பத்தியில் லாதபூசை
பார்த்திப ரிலாத பட்டணம்பூக மந்திரிகள்
பற்பல ரிலாதவரசு

கந்தமில் லாதமலர் சத்தியமி லாதவாய்
கல்வியில்லாத தேகம்
கனவினய மில்லா நியோகிசுசி யில்லாத
கன்மமுப தேசமில்லா
மந்திரமிவை வித்வசன மில்லாத சபையென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (62)

## சங்கீதச் சிறப்பு

புருவநெறி யாமல்மணி யெயிறுதோன் ருமல்
புரளாம லங்கசேட்டை [விழி
புரியாமன் மிகுதலையை யசையாமல் மிடறு
பொருமிவிம மாமலியல்பாய்ச் [தான்
சுருதிலயை சுரஞான நீதியொடு வீணையின்
ருெனியினு தப்பிரமாய்த்
துய்யதந் திரியோசை மிடருேசை யென
தோன்றும லின்பநயமாய்த் [வேறு
தருமதுர வமுதரச மொழிகுசர ளிகள்பழகு
சங்கீத வித்தையென்ருல்
சகலர்க்கு மானந்த மாகுமது பாடுமவள்
சரசகுண வஞ்சியெனிலோ
மருவியிதழ் பருகியணை யாமலுயி ருய்யுமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (63)

## பரதச் சிறப்பு

பரதால முஞ்சுதி யடங்கமிகு தொனிசெயும்
பண்புபெரு வோன்மத்தளி

பலராக கீதமொடு தாளங்கொள் கனவிதம்
பாடுவோ னேபாடகன்
கரதாள மேல்மனமு நடனபா தத்தின்மேற்
கண் ணுமுடை யோனட்டுவன்
கையின்மேல் விழியுமங் கைவிழியி னபினயங்
காட்டுமவ ளேபாத்திரம்
சுரதாள லயமார்க்க மாகுமிங் கிதபதஞ்
சொல்லுமவ ரேபாரிசனம்
துதிபெற்ற நடனப்ர சங்கமதில் வேறுதொனி
தொனியாத சபையேசபை
வரதாள முடனரவி னடமிடு பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (64)

## நாடகச் சிறப்பு

சுகந்தபரி மளவஸ்த்ர பூஷண லங்கிருத
சோடுமுவ்ஸ தீபுவேண்டும்
தோகையர்க ளும்பரி சனங்களுங் கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிகுந்தரஸ் தாளிக் கரும்புதேன் முதலான
மேன்மைபோ லின்பரசமாம்
வேஷங்க ளந்தமுஞ் சாதியும் பஷையும்
வெவ்வே றிருத்தல்வேண்டும்
புகழ்ந்தபத மிங்கிதம் பரிகாச விகடங்கள்
புண்ணிய கதாப்ரசங்கம்
போற்றுபர் வாணர்மிகு ராகதா ளஞ்சுருதி
புகல்கின்ற பரதநடனம்
மகிழ்ந்திடுஞ் சபைதேவர் சபைசென்று சொல்
மணவாள நாராயணன் [வர்காண்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. (65)

## விநோத வித்தைச் சிறப்பு

சத்திகண பதிதுர்க்கை சரஸ்வதி மகாகாளி
 சாமுண்டி யென்றுவாழ்த்திச்
சங்கமொடு ஜெயகண்டி டக்கைகைத் தாளங்
 சத்தமொடு மிகமுழங்கச் [கள்
சித்ரமிகு மாத்திரைக் கோலின்முறை யங்கமுறை
 செப்புமுறை பத்துமுறைகள்
செய்யுமுறை யறுபத்து நாலுகலை கரணங்கள்
 சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரி ஸ்தம்பனம் தாதியா மஷ்டாங்க
 விதமாம யெந்த்ரசாவம்
மிகுமிந்த்ர சாலமுத லானசெப் பிடுவித்தை
 மேன்மையவர் தந்த்ர நீதி
மத்தகச ராசதே வேந்த்ர னுந் தெரிவனோ
 மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. (66)

## பௌராணிகர் முதலியோர் சிறப்பு

ஆருக்கு மானந்த மாகவே பொருள்சொல்லு
 மவனே புராண நிபுண
னங்கமொடு கிரகநிலை கணிதமுந் நீதிகுவே
 னருள்புரோ கிதசூரன்
சீருற்ற சபையெலா மெச்சப்ர சங்கமுறை
 செப்புமவ னேவித்துவான்
செய்யுமந் திரயந்த்ர தந்த்ரமொடு மிக்கசுப
 சீலனே மந்த்ரவாதி

ஏருற்ற கல்விகுண மேன்மைபொறை போதங்க
ளிசையுமவ னாசாரிய
னென்றுவமர் சொற்படி நடந்துபய பத்தியொ
டிருக்குமவ னேசீஷனும்
மாருக்கு வேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (67)

## மருத்துவ னியல்பு

திரமான சாஸ்திர முணர்ந்ததொரு சிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகா லஞ்சாதி தேகங் குணம்பிணி
சிறக்குமா றுந்தெளிந்து
கரமான நாடிமுத லெட்டுப் பரிட்சையுங்
கண்டுகலி கங்கியாழுங்
கனகுளிகை பஸ்பமொடு சிந்தூரஞ் சூரணங்
கருதுலே கியதயிலமாம்
பரமான நன்மருந் துங்கொடுத் துசிதமாய்ப்
பத்தியமு மெளிதாகவே
பரிவுபெறு மாரோக்கிய ஞ்செய்து திரளாசை
பகராத பண்டிதனெனின்
வரமான தன்வந் திரிக்குநிகர் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (68)

## ஊனர் மருத்துவனுக்குச் செய்யு முறைமை

சேர்க்கின்ற கனரோக முற்றால் வைத்தியன்
றெய்வமாங் கேட்டதெல்லாந்

திரள்கோடுப் போமென்பர் தீருமிப் பிணி
செப்பினு லன்றுகுருவாம் [யென்று
பார்க்கின்ற குளிகையது தந்தபின் தந்தையாம்
பாதிலகு வானபின்பு
பண்பான துணைவனு ரோக்கியஞ் செய்தபின்
பகர்கின்ற மைத்துன னுமாம்
ஏர்க்கின்ற மற்றைநா ணையன்மறு நாளினி
லிசைந்தகட னளிமறுநா
ளெதிர்வரிற் பகையாளி யாகுமிப் படி
மீனர்சில ருண்டுகண்டாய் [யெண்ணு
வார்க்கின்ற தானமொடு வளர்கின்ற வள்ளலே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (69)
ஆராயாது செய்யு மெழுவ ரடையுங் கதி
நீதிவழு வாவகை வழக்குரைப் போர்களு
நிறைந்ததீ வினைகளெல்லா
நீங்குபரி காரமுறை செய்குவோ ரும்பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்
சோதிடஞ் சொல்லும்பு ரோகிதரு மூலகந்
துதித்தசெங் கோல்வேந்தரும்
தூயவுப தேசதே சிகருமவர் சீஷரும்
சொல்லுமிவ ரேழுபேரும்
ஆதிமறை நூலிலுரை செய்தவித மாராய்ந்
தறிந்துதெளி யாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடும் பேரிலு
மகோரநர கடைவர்கண்டாய்
மாதிர நெடுங்கடல் வளர்ந்தநெடு மாயனே
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (70)

## நித்திய கருமச் சிறப்பு

கருணை நதி மூழ்கியே சந்திவந் தனமுடன்
கருதுஜப தபவோமமும்
கடவுளோர் பூசையுஞ் செய்துவே தாகமக்
கல்வியது முறைபடித்துத்
தருமத் தியானநற் கருமமா நீதியொடு
தந்தைதாய் புத்திரருடன்
ருணுவு செய்துரா மாயணம் போற்றியே
சந்தியோடு கருமநண்ணி
பரிவுடன் நின்றிருக் கோயில்வல மாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பண்பான சந்த்ரோ தயத்தின்மல ரணைமீது
பாரியுட னேமகிழ்ந்து
மருவியே வாழுமில் வாழ்க்கையே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (71)

## குடி வாழ்க்கைச் சிறப்பு

மிக்கதெய் வத்தலமு ஞானகுரு பீடமும்
விளங்குமா நதியுமறையோர்
மேவிய கிராமமும் பூமிநல முந்தனமு
மேலரசு முடையநாட்டில்
மூக்கனி தருஞ்சோலை நீர்வளங் குடிவள
முயங்குபயிர் வளமுமுளதாய்
மொழிந்தநாற் குலமுஞ்செ ழிப்பதாய்த் தேர்
வீதிமுதலாய் விளங்குமூரில்

தக்கதொரு வீதியொரு பானடுவி சாலமாய்ச்
சார்ந்தசிங் காரமனையிற்
றனதானி யங்கறவை முதலான செல்வந்
தழைத்தன்ன தானமுதவி
மக்கண்மரு மக்களொடு வாழ்வதே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (72)

**மருத்துவர் செல்லத் தகா விடங்கள்**

தீராத ரோகமுடை யோரிடமு முண்மையது
செப்பாத பொய்யரிடமும்
சீரான வொருவர்பண் டிதமன்றி வெகுவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
ஏராத கோபமுறு மூர்க்கமன் னவரிடமு
மேந்திழையை மனதுபிரியா
வின்பமா மதிவிரக மானகாமுக ரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
தாராத லோபரிட மும்பத்தி யந்தனைத்
தாழ்வுசெய் வோர்களிடமும்
சகலசன கண்டக ரெனுந்துஷ்ட ரிடமுமிகு
தனமாரி யேபொழியினும்
வாரா திருப்பதே பண்டிதர்க ணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (73)

**நோய்க் கிடங்கொடார் செய்கை**

சனிபுதன் றனிலெண்ணெய் வெந்நீரின் மூழ்கு
சாருமிள வெயில்விரும்பார் [வார்

தம்வயதின் மேலான மங்கையைச் சேரார்
சதாகாலம் வழியினடவார்
பனியினுங் காற்றிலும் மெய்வருந் தார்மடைப்
பள்ளியிற் சேவகமிரார்
பழங்கறி யருந்தா ரிரண்டடக் காரொன்று
பலகால மும்விட்டிடார்
கனியொடு கிழங்குகள் மிகுந்துபசி யார்பசி
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பர் நீர்மோர்கூட்டு வார்தினங்
காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்குநோய் [சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (74)

தந்தை முதலியோர் இவரெனல்

நிலமுடன் கிருகமுஞ் செல்வமுந் தந்துகட
னிலுவையொன் றில்லாமலே
நிறைகல்வி யுரைசெய்து நெறியொடு வளர்க் [கின்ற
நேசனே யுயர்தந்தையாம்
கலைமதிய மெனவே வளர்ந்தபின் செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரிய புத்திரன் போலமரு மகனையும்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலை யுணர்ந்துமிகு செல்வமுந் தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியே யவர் [சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழி செழுஞ்சோலை மலைவளரு மாயனே
மணவாள நாராயணன்

மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (75)

நற்புதல்வ னியல்பு

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவோ
ரடைந்திடுவ ரந்தனைப்போ
லடுத்தவர் தமைக்காத்து மிக்கமே வலர்தமை
யடக்குமுன் சக்கரம்போல்
பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசும்ப்ர சங்கமதுபோல்
பேருலக மெய்க்கவரு மனுநீதி முடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடி நட்சத்தி ரங்களுட னடுவே
யுதித்தசந் த்ரோதயம்போ
லுபயகுல சுத்தனும் பகீரதன் போலவே
யொருபிள்ளை போதுமவனால்
மரபெலா நன்மையே யடையுமென் பார்கள்
மணவாள நாராயணன் [காண்
மன திலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (76)

சகோதர ரொருமை

தனதுபட் டந்தனைத் தம்பியர்க ளீயெனத்
தந்துமகி ழுந்தமையனுந்
தமையனார் வருமளவு மாவிரத மாகவே
தபசுபுரி யுந்தம்பியும்
கனதனப் பாலீந்த தாய்தனைப் போலவே
கருணைசெய் திடுமதனியுங்
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணி
கனிட்டவனிட மனையாட்டியும் [யுங்
தினந்தினம் பரிவாகி யம்மையே யென்றுபேர்
செப்புங் கொழுந்தனுரும்

சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதாயு கந்தனில்
தெசரதர் குமாரர்கண்டாய்
வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ் களமூரில்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (77)

### வேட்டகத் தியல்பு

காரிகை தனைத்தந்த மாமனார் மனைதனிற்
கருணைமரு மகன்வந்திடிற்
கண்டவுட னுசார வுபசார மாகவே
கனவிருந் துகள்சமைப்பார்
சேருநாண் மூன்றுகி லமரபட் சத்திற்
செனித்தசந் த்ரோதயம்போற்
தினந்தினம் பெருமைகுறை யுங்காரி யங்
செய்யென்ப ரத்தைமுதலோர் [களுஞ்
ஆருமெண் ணூர்கண்மைத் துனர்சரச பரிகாச
மதிகமா மனைவியெனிலோ
அன்புடன் சொன்னபடி கேளாளி தாகையா
லாதியொரு கதையல்லவோ
வாருமென் றவரேக வசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (78)

### மானங்கெட்டு பிழைப்பவ ரிவரெனல்

நேசமுறு சிறுமிதன துறவினன் மருகன்மனை
நிலையென்று வாழ்ந்தபேரும்
நேரிழை தனைத்தந்த மாமனார் மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரிய கல்விதெரி யாமூடர் பேரிற்ப்ர
பந்தகவி சொன்னபேரும்

பெருமைபோய்க் கள்ளக் கடன்களே பட்டுப்
பிழைத்துயிர் சுமந்தபேரும்
ஏசவரு பகையாளர் தங்கண்முன் கைகட்டி
யேவல்செய் கின்றபேரு
யீனமது பார்ப்பரோர வயிறுசா ணன்றிவர்க்
கெண்கா ணு வயிறுகண்டாய்
வாசமலர் மங்கைகுடி கொண்டுவளர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (79)

## கற்புடைப் பெண்டி ரியல்பு

ஓதுஜப பூசைகட் கினியசூற் றேவல்க
ளேகந்துசெய் போதுகுருவா
முறைகொண்ட சரசஞ்செய் போதுமன் மதனு
மொழிந்தவே ளைத்தெய்வமாம்
நாதனைக் கருதியவ னுண்டகுறை யமுதாக
நவில்வதே யுபதேசமாம்
நதியாடல் பலநோன்பு தேவதா தரிசன
நயந்தபல விரதமுமவன்
பாததரி சனமாக்கொள் சுத்தியாய்ப் புத்தியாய்ப்
பத்தியாய்க் கடலிலுழும்
பாரென்று கனவிலுறை செய்கினுஞ் செய் [கின்ற
பதிவிரத மார்க்கமான
மாதர்புகழ் நீதியே துதிமெற்ற தல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (80)

## நற்பெண்டி ரியல்பு

பஞ்சணையி னருகாக நின்றுவா வென்றபின்
பரிவினுட னருகில்வந்து

பாக்கிலை மடித்தசுரு ளீந்துமெத் தையில்வந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர் சூடியிசை பாடிவிளை யாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியித ழிருவோரு முறைபருகி யினியபுட்
குரலோசை மிகமுழங்க
நெஞ்சமகிழ் வொடுசுரத கரணகரி கரவுபரி
நேயரதி கேளிதன்னால்
நிறையமிர்த போகசம் போகவை போகமுட
னீங்காத போகமுதவும்
வஞ்சியின லாதுமனம் வேறொன் றின் மகி
மணவாள நாராயணன் [ழுமோ
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (81)

## தீப்பெண்டி ரியல்பு

ஐயருக் கமுதுபடை யென்றுவந் தாய்நீயு
மாண்பிள்ளை யென்றெண்ணவோ
வரிசியெங் கேபானை சட்டியெங் கேயென்ப
ளவள்சொன்ன வகைகளெல்லாம்
பையவே கொண்டுவந் தாலுஞ் சமைக்கப்
படாதுதலை நோகுதென்று
பாயிற் கிடப்பள்சின மாயொன்று பேசினால்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல் லேனென்பள் சற்றடித் தானஞ்சு
தின்கிறேன் கூகூவெனத்
தெருவீடு தோறுமுறை யிடுபெண்டி ருண்
டீயநமன் வேறுமுண்டோ [டெனிற்
வையகம் புகழ்சோலை மலையலங் காரனே
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (82)

**பரத்தைய ரியல்பு**

கொச்சியுறு மஞ்சள்வங் காலமுறு பச்சையிவை
கூறுசண் பகமொட்டுடன்
கூடிய நலங்குமஞ் சனமாடி பொற்கண்டை
கொண்டவெண் டுகிலுடுத்துக்
கச்சிலங் கொங்கைமேற் கந்தபரி மளகளப
கஸ்தூரி குழுகுமென்னக்
கனகநவ ரத்னமய பூஷணம் பூண்டுகிளி
கையின்மிசை யேந்திநலமாய்ப்
பச்சைமயில் போலிரதி வேலைக்கு மிகுசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையி லிருக்கும்
பரத்தையுண் டாவளென்றால்
வச்ரதர னுலகத்த ரம்பையிலு மதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (83)

**பிரௌடை வேசைய ரியல்பு**

ஆசையுட னொருவிரக புருஷன்வந் தால்மிகவு
மாசார வுபசாரமா
யாசனந் தனிலெழுந் தருளுமென் றருகிருந்
தழகான வொருதட்டிலே
நேசமொடு தாம்பூல முதவியே யவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீதியா யந்தநாள் வந்தநீர் பின்னெனை
நினைத்திலீ ரென்கொலென்று
பேசரிய சங்கீத சரசசல் லாபப்ர
சங்கமொடு ரதிகேளியில்

பிரியமுட னேயணைந் தின்பமா யுசிதம்
பெறிற்ப்ரௌடை வேசையென்பார்
வாசமிகு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (84)

## பரத்தைய ரிழிவு

விலைமாதர் வீடுசவு ளிக்கடை படுக்கையது
மேவுமனை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறையவ ரங்கமோ
மேவிய படித்துறையதாம்
கலைமருவு மவரல்கு லோடமா மிருகொங்கை
கடையிலெலு மிச்சம்பழம்
கனிவாய் படிக்கமிரு துடைகடண் ணீர்ப்
கட்டுகத லிக்கம்பமாம் [பந்தல்
முலைமார்பு வாடகைக் குதிரையிடை யேணியவர்
மோகமெனி லெட்டிக்கனி
மொழிமுயற் கொம்புசே ரின்புவெந் நீராமை
முறைமையிவை கண்டிருந்தும்
மலைவுபெறு வார்கள்ரச வாதிக்கு நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (85)

## சரீர நிலையாமை

ஆகாய மீதினி லெறிந்தசிலை காற்றினை
யடைத்துவைத் திடுதுருத்தி
யனலிட்ட மெழுகுவெயி லிடையிட்ட வெண்
யாற்றிடை யெழுந்தகுமிழி [ணெய்சுழி
மோகா விகாரமொடு வருகின்ற மின்னல்விழி
மூடுதுயில் கண்டகனவு

மோதிவரு காற்றினிற் றீவிழுந் திடுபஞ்சு
மூச்சோடு கின்றபதுமை
மீகாம னில்லாத கப்பல்கண் ணிமைபோல்
விளங்கவரு தேகமிதனை
மெய்யென்று மெய்யெலாம் பொய்யென்று
விழலனெனை யாளநினைவாய் [திரிகின்ற
மாகாள முகிலனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (86)

## நல்வினை செய்வோர் வேறு

ஓதுமா தாபிதா குருதெய்வ விசுவாச
முடனதிதி பூசைசெய்வோ
ருற்றபர தாரசோ தரமாகு வோரதிக
மொருவர்க்கு பெண்ணிலாதோர்
பூததய வுள்ளோர் சகாயமே புரிகுவோர்
பொய்யிலா வாய்மையுடையோர்
பூர்வமாந் தருமபரி பாலனம் பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தவனம்
பாதையிடை மண்டபங் கூபந் தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பா மிவர்க்குமலை போல்வந்த வினை
பனிபோல நீங்கிநலமாய் [யெலாம்
மாதவ முகுந்தவுன் பாதமே பெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (87)

## மாதர் அவயவ மயக்கு

சிக்குமிக வேநாறு கின்றகுழன் முகிலென்பர்
திரளுத்தை மாமுதவாய்

செம்பவள மென்பர்சளி கொண்டுநீர் மாருத
சிறுநாசி குமிழதென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமுலை யானதோற்
பையைமக மேருவென்பர்
பாராத நரகத் துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாத நரகந் தருஞ்சிறிய இன்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலிலெனை வீழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (88)

## நிதியின் பெருமை

விந்தையே செய்திடுங் குருபீட மொன்னலரை
வென்றுவரு கின்றதளவாய்
மித்திரர்கள் பகைவரா மேவலர்க ணையரா
விந்தைபுரி தானுபதி
புத்திநல மேசொல்லு மதிமந்த்ரி யாவரும்
புகழ்கின்ற வசியகுளிகை
புளகமுலை மாதருக் கதிரூப வின்பம்
பொருந்தவரு காமதேனு
நிந்தனும் பெருமையே செயுமரசு தான்மொழியு
நிலைசெயத் தக்கக்ஷாத்ரம்
நேர்ந்தமிடி யென்கின்ற மாதங்க கேசரி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங் குலதெய்வ நிதியன்றி வேறேது
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (89)

**உயர்ந்த பொருளிருக்குமிடத்து இழிந்த பொருளிருக்கு மெனல்**

கோகனக மலர்மலர்ந் துறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்கும்
கோகிலந் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமென வுலகம் புரந்தமன் னவர்சபையி
லீனமன் னருமேவுவா
ரிலகு மாணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற்பாலை மணியும்விற்பார்
பாகனைய மதுரரச லளிதப்ர பந்தகவி
பாடுமன் னவர்கள்சபையில்
பழங்காடி தனிலும் புளித்தபுன் கவிசொலும்
பாவலரு முண்டுகண்டாய்
மாகனக முறையுமொரு மணியணியு மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (90)

**சேர்ந்தவினத்தின் குணம் பெறுவோர் பெருந்தோ ரிவரெனல்**

சோதி நவரத்னமணி மாலையிடை நூலுந்
துலங்குமணி யாய்விளங்குஞ்
சுரைப்பழந் தன்னுடன் சேர்ந்தசெம் பொன்
துரும்புபோ லேமிதக்கும் [னுந்
வீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங் காதொளிவிடும்
மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்
வெள்ளுள்ளி நாற்றமாறு [கினும்

தாதலாற் சேர்ந்திடு மினங்களைப் போலவே
யவனியி லிருப்பர்சிலபே
ரார்சொல் லினுந்தங்கள் சுயகுணம் விடாமலே
யமைவுற்று வாழ்வர்சிலபேர்
மாதர் துகில் கொண்டொரு குறுந்தேறு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (91)

## வல்லோர்க்கும் புல்லோரால் தாழ்வு வருமெனல்

பரராசர் வச்ரமகு டந்தகர்த் திடுகத்தி
பஞ்சுமெத் தைக்குநாணும்
பணிராசர் மணிமுடிகள் சிதறநட மிடுதோகை
பச்சோந்தி யானடுங்கும்
கரராச மார்த்தாண்ட சந்த்ரகிர ணங்களொரு
கட்செவியினன் மறைபடும்
கனதைப்ரி விகடதட மத்தமா தங்கமொரு
கனல்சிறிது கண்டுபயமாம்
சுரராச கங்காப்ர வாகநிக ரூற்றுமொறு
துய்யசிலை யான்மறிபடுஞ்
சொல்கின்ற பெரியோர்க ளென்றாலு மற்ப
ரோல்விகொடு முறிவர்கண்டாய் [ராற்
வரராச தசரத மகாராச புத்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (92)

## நல்லோர் புகழ் நிலைபேறு

விசயன்மனு வுடனிட்சு வாகுகுச நாபன்
விகுட்சிரகு காகுஸ்தனும்

மிகுமம்ப ரீஷன்மாந் தாதன் ...ந்தன்
விசாலனே திரணபிந்து
சசிபிந்து வொடுதிலீ பன்னரிச் சந்திரன்
சர்வதா மன்பரதனே
சந்தனு நளன்சத்ய விரதன் பகீரதன்
சகரனொடு தானகர்னன்
தெசரதன் மருத்துப் புரூரவன் சென்னியே
திரிசங்கு வுடன்யயாதி
சித்ரசே னன்வீர சேனன்ருது பனனிந்த்ர
சேனன்விது ரன்பாண்டவர்
வசுதேவ னாதியோர் புகழன்றி நின்றதிலே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (93)

## தீயோர் பழி நிலைபேறு

சூரனொடு பானுகோ பன்றிரி புரத்திேனார்
துரகனே மதுகைடவர்
துந்துமகி டாசுரன் சம்பர சலந்தரர்
தூஷணன் றிரிசிரகரர்
வீரரா வண்கும்ப கர்ணரிந் திரசித்து
மிருகனக னிரணியாட்சன்
வெய்யவா தாவிலில் வலனுடன் சூர்ப்பனகை
மேவுமச முகிதாடகை
தாருலவு சிசுபால தந்தவக் கிரர்சரா
சந்தனொ டடல்கீசகன்
சகுனி துரியோதனன் கஞ்சன்முத லாயினோர்
தங்களப கீர்த்தியல்லால்
வாரிசூழ் புவியிலவர் கொடுமைநிலை நின்றதோ
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (94)

### வானப்பிரஸ்தன் முதலானோ ரியல்பு

ஒருபொழுது மவமே யிராமனற் கருமங்க
ளுணர்வுடன் செய்துமனையா
ளொடுகாம மின்றியுன் பாதங்கள் போற்றி
முறைவன் வா னப்பிரஸ்தன் [வன
கருமமுட னுனதுபக வற்கீதை துதிசெய்து
காமமுத லாறுமூன்றுங்
கருதாம லொருபோது சுவை நீக்கி யேயுண்ட
கருணையோன் சந்நியாசி
இருவினையு மவைசெய்த துஞ்செயச் செய்வது
மின்பமுங் கன துன்பமு
மெண்ணரிய சாதிமர பும்பலவு முன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
வருமவினை யவதூத மெய்ஞ்ஞானி யென்பர்
மணவாள நாராயணன் [காண்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (95)

### உத்தமர் முதலானோ ரியல்பு

வினயமுட னன்னமுஞ் சுகமுமே ஷமுமென்ன
வித்தையுரை தன்னையறிவார்
மிகுதாழை கற்பகங் கன்னன்மலர் போன்மரபு
விதமாய் விளங்கவருவார்
பனையிறெடு நாளிகே ரங்கமுக மென்னவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ் சூதமும் பாடலமு மென்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினமருவி னீரெழுத் தொடுமண லெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்

செப்புமிவர் தமையாதி யந்தமாப் பார்க்கவே
சிந்தைதனி லாய்ந்துபுவிமேல்
மனிதருத் தமர்கள்மத் திமரதமர் மூவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (96)

தேசங்களின் பெயர்கள்

அங்கமத் திரமாள வஞ்சால வங்கேக
யாரியம் பாரசீன
மாந்திரம ராடமே கன்னட மிடங்கண
மவந்தியொடு சேதிகுகுதம்
கங்கைதிகழ் காஷ்மீர மச்சங் கிராடங்
கரூசமே சூரசேனங்
கலிங்கமொடு வங்காள நேபாள சிங்களம்
கனத்துளுநு வங்கேரளம்
கொங்கணம் போடந்த்ரி கர்த்தம் புளிந்தங்
குளிந்தங் கிராடமகதங்
கூர்ச்சரம் பப்பரம்வி தர்ப்பகாம் போஜநற்
கோசலஞ் சிந்துகௌடம்
வங்கமும் பணிகின்ற கருடகிரி வாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (97)

தேசமுதல் அண்ட மளவாக நிற்குநிலை

ஒட்டமுறு சாதகஞ் சவ்வீர பாஞ்சால
மோங்குநிட தங்கடார
மூகந்தரஞ் சோனகஞ் சீனசாந் தாரமோ
டுலவுமலை யாளவங்கம்
இட்டமுறு த்ராவிடஞ் சோழபாண் டியமாதி
யெண்ணேழு தேசமாகி

யிலங்குபர தக்கண்ட மாதிநவ கண்டங்க
ளேய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசை பெற்றதீ வேழுபூ லோகமிஃ
தாதிமே லேழுலோக
மதலமே யாதிகீ ழேழுலோ கங்களிவை
யவையுமீ தோரண்டமாம்
மட்டிலா வண்டங்க ளுன்றிரு வயிற்றிலுறு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (98)

**பதினெண் கணங்க ளிவையெனல்**

தேவருட னசுரர்கள் சித்தர்க டயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந் தருவர்கின் னரரிராக் கதர்பூதர்
தீதில்வே தாளர்முனிவோர்
மேவுவிஞ் சையருரக ரந்தர ரியக்கரே
மேலுமா காசவாசர்
மிகுபோக பூமியோர் முதலாய பதினெட்டு
விதமான கணநாதரும்
பூவையர்க ளுங்கண்டு துதிசெயுந் திருமலை
புகழ்ந்துகோ னேரிமூழ்கிப்
போற்றியுன் சந்நிதி வணங்கியே துதியாத
புன்சனன முஞ்சனனமோ
மாவலி யணிந்தசெம் மணிமகுட பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (99)

**பரம பாகவத ராவா ரிவரெனல்**

சுகனொடு வியாசன் பராசரனொடு சவுனகன்
றுய்யநா ரதன்வசிஷ்டன்

துங்கவான் மீகிமா வலிருக்கு மாங்கதன்
சுக்கிரீ வன்மாருதி
தருமிட்சு வாகுவீ டுமனுடன் பிரகலா
தனன்குசே லன்விஜயனே
தருமனொடு முசுகுந்த னக்குரூ ரன்பணி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிகிரி சடைமாது பாஞ்சாலி சபரிமு
னழைத்திடக் கஜராஜனே
யாதிரா மாநுஜ றிருவரங் கத்தமுத
ராழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறு முன்ரெண்டர் பாதமே துணை
மணவாள நாராயணன் [கொள்ளும்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (100)

## அடியார்க்கு வருஞ் சிறப்பு

உனதுபா தம்போற்று மடியார்கள் சிந்தையி
லுவந்துநீ யென்றுமுறலா
லுன்னுடைய திருமாத ரெண்மருஞ் சேர்
ருற்றதா னிதிகள்சேரும் [வரவ
கனநிதிகள் சேர்ந்திடத் தனதன்வரு வானுடன்
கருணைபுரி நேயன்வருவான்
காதல னடுத்ததா லுமைவருவ ளன்னையாற்
கந்தன்வரு வன்மருகனால்
தனதுமா மன்வருவ னரசன்வர லாலமரர்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ் செழிக்குமருள் சேருமது வன்றியே
தவமொன்று செயல்வேண்டுமோ
வனசரோ ருகமலர் மடந்தைவளர் களமூரின்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (101)

## அவையடக்கமும் பிரார்த்தனையும்

ஒருமலை யெடுத்துமழை காத்தவா மனதேவ
ருபயபத சேவைதனையே
யுளங்கொண்டு வெண் மணியில் வாழுமுத்
துதவுநா ரணபாரதி [தாரைய
பொருமலை பெருங்கங்கை யுங்காளி யாறும்
பொருந்துகடல் போற்புலவர்கள்
புகழ்சபையி லெனதுவேங் கடசதக நீதிநெறி
புகலவரு நூறுகவியும்
பரிவினுட னனைவருங் கேட்டுயென் றமிழின்
பக்ஷம்வைத் தாளவருவாய் [மேற்
பாலகன் புன்சொலைக் கேட்டுமே மகிழுமவள்
பார்மீதி லன்னையலவோ
வருபவர் களிக்கனல் வரமுதவு நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (102)

திருவேங்கட சதகம் முற்றிற்று

---

ரத்னம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.